# Chezhumai

# செழுமை

# TIST India

## Local Small Groups are the Foundation of TIST



T I S T F a r m e r s H e l p W o r l d w i d e P r o b l e m

**The International Small Group & Tree Planting Program**

TIST India: 19/8, Lake View Road, Kottur, Chennai 600 085, Tamil Nadu, India
Phone : +91 44 42188438 / Mobile: +91 9840299822 / Email: josephrexon@tist.org

## HELPLINE

For any information or help
Dial 9003020836 / 9003020837

If you have any difficulty in
TIST Program dial 9840299822

Our landline: +91 44 42188438

Our email: josephrexon@tist.org

Our address: 19/8, Lake View Road,

## தொழில் முறை உதவி

எந்த தகவல் அல்லது உதவிக்கு
**9003020836 / 9003020837** ஐ டயல் செய்யவும்.

டி.ஐ.எஸ் டி திட்டத்தில் உங்களுக்கு ஏதாவது கஷ்டம் இருந்தால்
**9840299822** ஐ டயல் செய்யவும்

ஏங்களது தொலைபேசி
+91 44 42188438

எங்களது மின் அஞ்சல் (ஈ–மெயில்)
josephrexon@tist.org

எங்களது விலாசம்
**19/8**, ஏரிக்கரைச் சாலை, கோட்டூர்
சென்னை **600085**.



TIST Quantifiers quantifying the trees
TIST கணக்கெடுப்பு அதிகாரிகள் கணக்கெடுத்த

## Small Group GHG Signing

We have informed through previous Chezhumai about the importance of GHG contract. In short, once again we explain the importance of GHG contract - By signing the GHG contract, a Small Group gives the rights to TIST to sell their carbon credits, that's it, nothing more. TIST requests the Small Groups to give the rights to sell their carbon credits and follow the 'Best Practices' of TIST regularly. Without this rights (GHG) from the Small Groups, TIST will not be able to sell the carbon credits, in other words, TIST will not be able to fund for the voucher payment to the Small Groups without the sale of the carbon credits. Several Small Groups have signed the GHG Contract in the last two months

## சிறு குழு – ஜிஎச்ஜி கையெழுத்திடுதல்

ஜிஎச்ஜி ஒப்பந்தத்தின் முக்கியதுவத்தை "செழுமையின்" முன் இதழில் தெரிவித்திருந்தோம், சுருக்கமாக சொன்னால் – ஜிஎச்ஜியில் கையெழுத்திடுவதின் மூலம் சிறு குழு தங்களின் கார்பன் கிரிடிட்டுகளை விற்கும் உரிமையை டிஜஎஸ்டிக்கு அளிக்கிறது. இந்த உரிமையை மட்டுமின்றி டிஜஎஸ்டியின் சிறந்த பயிற்சிகளையும் கடைபிடிக்கின்றனர். சிறு குழுவினர் இவ்வுரிமைகளை டிஜஎஸ்டிக்கு கொடுக்க தவறினால் டிஜஎஸ்டியால் கார்பன் கிரிடுட்டுகளை விற்க இயலாது. இதனால் வவுச்சர் பேமென்டடுக்கான மூலதனத்தை டிஜஎஸ்டியால் கொடுக்க இயலாது. சென்ற இரு மாதங்களில் பல சிறு குழுக்கள் ஜிஎச்ஜி ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளனர்.

## Dr.Abthulkalam Small Group of Gingee Center

This small group is at Ethanemili Village of Gingee Center. Two farmers family have joined together to farm this group and they have planted trees, and are following the best practices of TIST. The members of this group heard about TIST program through their neighbouring villages and joined the program voluntarily. About 3 months back, the members of this group planted 7500 Kumil trees in 7 acres of their own land.

The members take good care for their trees. The trees are planted with 7 feet spacing. Good ridges & furrows are formed all around their tree groves, so that, the available little water is watered to all the trees effectively. The members say that, through this system they are able to save water.

## டாக்டர் அப்துல்கலாம் சிறுகுழு செஞ்சி மையம்

டாக்டர் அப்துல்கலாம் சிறுகுழு செஞ்சி மையத்தில் ஏதாநெமிளி கிராமத்தில் உள்ளது.. இரு குடும்பத்தை சேர்ந்த விவசாயிகள் இணைந்து டாக்டர் அப்துல்கலாம் என்னும் சிறுகுழுவை உருவாக்கி TIST யின் மரம் நடும் திட்டத்தில் சிறந்த செயல் முறைகளில் பணியாற்றி வருகின்றனர். இந்த சிறு குழு உறுப்பினர்கள் TIST ன் சிறந்த செயல்பாட்டினை அரிந்து தாங்கலாகவே வந்து TISTன் சிறு குழுவாக தங்களை இணைத்துக்கொண்டனர். இக்குழுவின் உறுப்பினர்கள் மூன்று மாதங்களுக்கு முன்பு 7 ஏக்கர் நிலத்தில் 6500 குமிழ் மரக்கன்றுகளை நடவு செய்தனர்.

இக்குழு உறுப்பினர்கள் 7 அடிக்கு ஒரு கன்று நடவு செய்துள்ளனர். மேலும் அவர்களிடம் இருக்கும் அளவான தண்ணிரை சிறந்த முறையில் மரங்களுக்கு நீர் பாசன வசதி செய்வதற்காக இரண்டு வரிசைக்கு ஒரு பாத்தி அமைத்து தண்ணீரை கன்றுகளுக்கு பாய விட்டு வருகின்றனர். இதன் மூலம் தண்ணீர் சேமிக்கபடுகிறது என்று கூறுகின்றனர்.



Dr.Abduthkalam Small Group
டாக்டர் அப்துல்கலாம் சிறுகுழு

About 80% of the soil in their land is red soil. Since the members are not able to do agriculture activity due to various difficulties, they have taken up tree planting activity. The members of this group are very active in TIST Program, they are interested to propate TIST Program in Gingee Taluk.

They also practice intercrops between their trees. Some medicinal plants are practiced as intercrops. By practicing regular intercrop between their trees, they are able to maintain their trees well.

மேலும் இச்சிறுகுழுவின் தோப்பு 80% செம்மண்ணால் உள்ளது. விவசாயம் செய்ய போதிய வசதி இல்லாததால் மரக்கன்று வைத்ததாக இக்குழு உறுப்பினர் கூறுகிறார். மேலும் செஞ்சி தாலுக்கில் ஆர்வமுள்ள விவசாயிகளிடம் TISTன் செயல்பாட்டை எடுத்து கூறி அவர்களையும் மரம் நடவு செய்ய வைப்பதாக கூரினார்.

இவர்கள் மரக்கன்றுகளுக்கு இடையில் ஊடுபயிர்களை பயிரிட்டு வருகின்றனர். மூலிகை செடிகளையும் ஊடுபயிராக பயிர் செய்து வருகின்றனர். மரக்கன்றுகளுக்கு இடையில் நல்ல முறையில் ஊடுபயிர் செய்து அவர்களின் மரத்தோப்புகளை நன்கு பராமரித்து வருகின்றனர்.



Member of Abdulkalam Small group seen happy along with his children in their grove
டாக்டர் அப்துல்காலம் சிறுகுழுவை சேர்ந்த ஓர் உறுப்பினர் அவரின் பிள்ளைகளோடு தங்களது தோப்பில் மகிழ்ச்சியாக காணப்படுகிறார்.

The best time to plant a tree was twenty years ago. The second best time is now. Utilize the TIST Program, plan and plant for a better tomorrow.

இருபது ஆண்டுகளுக்கு முன் மரங்களை வளர்த்திருந்தால் அது சிறப்பு, அதை தவறவிட்டவர்கள் TISTன் மூலமாக கிடைத்துள்ள இந்த இரண்டாவது வாய்ப்பையாவது பயன்படுத்திக் கொள்ளுங்கள். சிறந்த எதிர்காலத்திற்கு திட்டமிட்டு மரம் நடுங்கள்

## Mahatma Gandhi Small Group of Thurinjapuram Center

The members of this group are following the best practice of TIST at Thurinjapuram Center. They have planted their trees at Devanampattu Village. Last year, this group had only 213 trees, but now in one of their grove called Krishnan, they have planted about 1195 and there are still 156 seedlings for planting. In Krishnan grove, they have 496 sweet lime and 699 teak trees. These trees are planted with good spacing and maintained well. In Shanmugam grove, they have 58 Rosewood, 2 Indian tree, 96 Teak trees. Last year, the members of this group opened a SB account on their group namd and signed the GHG agreement too. Since they had only 213 trees, they did not get their vouchers. Now they have more than 1000 trees and they are ready to receive the voucher payment from TIST. The members of this group participate in all the activities of TIST Program with full zeal. They also practice intercrop between their trees.

Sign the GHG agreement and take the Voucher payment.

ஜிஎச்ஜி ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டு வவுச்சர் தொகையைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

## துரிஞ்சாபுரம் மையத்தைச் சார்ந்த மகாத்மா காந்தி சிறுகுழு

துரிஞ்சாபுரம் மையத்தைச் சார்ந்த மகாத்மா காந்தி என்னும் சிறுகுழு TISTல் சிறந்த செயற்பழக்கங்களை கடைபிடித்து வருகின்றனர். இச்சிறுகுழு அமைந்துள்ள கிராமத்தின் பெயர் தேவணாம்பட்டு. இச்சிறுகுழு கடந்த ஆண்டு 213 மரங்களை மட்டுமே பெற்றிருந்தனர் ஆனால் தற்போது கிருஷ்ணன் எனும் தோப்பில் மொத்தமாக 1195 மரங்களையும், சண்முகம் எனும் தோப்பில் 156 மரக்கன்றுகளையும் பெற்றுள்ளனர். இதில் கிருஷணன் எனும் தோப்பில் 496 சாத்துக்கொடி மற்றும் 699 தேக்கு மரங்களையும் நடவு செய்து மிகவும் நல்லமுறையில் பராமரித்து வருகின்றனர். சண்முகம் எனும் தோப்பில் 58 ரோஸ்வுட், 2 வேப்பமரமும், 96 தேக்கு மரக்கன்றையும் பெற்று நன்கு பராமரித்து வருகின்றனர். கடந்த ஆண்டு இவர்கள் வங்கி கணக்கு துவங்கி, கிரீன் ஹவுஸ் உடன் படிக்கையில் கையொப்பயிட்டனர், அப்பொழுது 213 மரங்கள் மட்டுமே பெற்றிருந்ததால் அவர்களுக்கு பற்றுச் சீட்டு கிடைக்கவில்லை. தற்போது இவர்கள் 1000 மரங்களுக்கு மேல் பெற்றுள்ளனர். எனவே TIST யிடம் இருந்து பற்றுச்சீட்டை பெறுவதற்க்கு தயார்நிலையில் உள்ளனர். இக்குழு உறுப்பினர்கள் TISTயின் அனைத்து செயல்பாடுகளிலும் மிகுந்த ஆர்வத்துடன் கலந்து கொள்கின்றனர். இவர்கள் மரக்கன்றுகளுக்கு இடையில் ஊடுபயிர்களை பயிரிட்டு வருகின்றனர்.





Mahatma Gandhi Small Group
மகாத்மா காந்தி சிறுகுழு

## Useful trees to plant

It is good to plant useful trees. Most of the group members are planting long standing trees. The below write-up on Red Sandalwood Tree is a copy from the book provided by the DFO, CPP Division, Forest Department, Vellore District. If anyone is interested to have the same in English, please write a mail to josephrexon@tist.org or call 9840299822.

## பலன் தரும் மரங்கள்

நல்ல பலன் தரும் மரங்களை நடுவது ஒரு நல்ல செயல். அனேகமான சிறுகுழு உறுப்பினர்கள் நீண்ட கால மரங்களை நடவு செய்கின்றனர். கீழே வரும் இந்த செஞ்சந்தன மரத்தினை பற்றிய கட்டுரை மாவட்ட வனபாதுகாவலர் (CPP Division வேலூர் மாவட்டம்) வழங்கிய வளம் தரும் மரங்கள் பாகம் 2 புத்தகத்தில் இருந்து எடுக்கப்பட்டுள்ளது. ஆங்கிலத்தில் பெற விருப்பம் உள்ளவர்கள் தயவு செய்து இந்த மெயிலுக்கு எழுதவும் josephrexon@tist.org அல்லது செல்:9840299822.

## செஞ்சந்தன மரம்

உலகில் நமது பகுதியில் மட்டுமே (ஆந்திரத்தையும் சேர்த்து) வளரும் செஞ்சந்தன மரத்தின்பால், கூடுதல் கவனம் செலுத்துவது நல்ல பயனளிக்கும். அதிக விலையுள்ள மரம் சிறந்த வருவாய் பெற்றுத் தரும். தற்சமயம் மிகவும் குறைந்த அளவிலே தான் மரம் கிடைக்கிறது. 1967 லிருந்து 1974ம் வரையான காலத்தில். ஆண்டொன்றுக்கு 153 டன்னிலிருந்து 444 டன் வரை சென்னைத் துறைமுகத்திலிருந்து ஏற்றுமதியாகியுள்ளது. வனத்துறையின் மூலம். ஆண்டொன்றுக்கு 200 டன் அளவே மரம் கிடைக்கிறது. மற்றும் இம்மரத்தை வாங்கிட, 29 நாடுகள் தயாராகவுள்ளன. எனவே, விவசாயிக்கு வருவாயும், நாட்டிற்கு அந்நியச் செலாவணியும் கிடைக்கும் வாய்ப்பு மிகவும் அதிகமாக உள்ளது.

மற்றும், நட்ட 25 30 வருடங்களில் வைரப்பகுதி நன்கு உருவாகும் எனவே தேக்கைப்போல் நீண்ட காலம் காத்திராமல், 30 35 ஆண்டுகளில், அதிகமாகப் போனால் 40 ஆண்டுகளில் வெட்டி விற்றிடக் கூடிய வளர்ச்சி பெற்றிடும், அதாவது மர வளர்ச்சி :– 0.6–1.0 மீட்டர் விட்டமுடைய அடிமரம் வளர்ச்சி ஏற்பட்டதும் வெட்டலாம். மென்பகுதியும் கூட, பொம்மைகள் செய்யப்பயன்படுவதால். மரத்தின் எதுவுமே விணாவதில்லை

சரளைப் பகுதி, செம்புறை மண் பகுதி ஆகிய நிலவாகுகள் ஏற்றவை, படுகை நிலங்களிலும் கூட, நன்கு வளரும்:: ஆனால் இங்கு நல்ல வடிகால் வசதி இருக்க வேண்டும். மண்கண்டம் குறைவான இடங்களிலும் கூட. மழை பரவலாக இருந்தால் வளர்ந்திடும். மொத்தத்தில் 880 மில்லி மழையானது, இரு பருவ மழைக் காலங்களிலும் சீராகக் கிடைத்தால், மானாவாரியில் நன்கு வளர்த்திடலாம் மற்றபடி, தமிழ்நாட்டு வெப்பச் சூழல், வளர்ச்சிக்குத் தடையாக இல்லை,

செஞ்சந்தன மரத்தை, மூன்று வழிகளில் பயிரிடலாம், நேரடியாக விதையை விதைப்பது:: நாற்றுத் தயாரித்து நடுவது: நாற்றுக் குச்சிகளை நடுவது என்ற இம்மூன்றில், பிந்திய இரண்டும் சிறந்தவை, போத்துக்கள் மூலமாகவும் வளர்க்கலாம் என ட்ரூப் குறிப்பிட்டுள்ளார்.

பெரிய மரங்களிலிருந்து, உதிரும் நெற்றுக்களைப் பொறுக்கி, உலர்த்த வேண்டும் ஒரு கிலோ எடையில் 900 1400 நெற்றுக்கள் இருக்கும். மேட்டுப் பாத்தியமைத்து நாற்ற விடவேண்டும். சதுரமீட்டருக்கு 1000 நெற்றுக்கள் அதாவது ஒரு கிலோ நெற்றுக்கள் என்ற கணக்கில் விதைக்க வேண்டும். துரிதமாக முளைத்திட, நெற்றுக்களை ஒரு இரவு முழுவதும் நீரில் ஊற வைத்து, நாற்றுக்காலில் செங்குத்தாகவோ அல்லது சிறிது சாய்வாகவோ ஊறவைத்த விதைகள் 20 25 நாட்களில் முளைக்க துவங்கிவிடும். இல்லையேல், 30 35 நாட்களாகும்.

நாற்றுங்காலில் ஆறு மாதம் வரை வளர்ந்த பின், மண்ணும் மக்கிய உரமும் கலந்து நிரப்பிய பாலிதீன் பைகளில் நடவேண்டும். சரளைக் கற்கள் நிரம்பிய இடங்களில் மூங்கில் கூடைகளில் எடுத்து நட்டு நன்கு உயிர் பிடித்துத் துளித்ததும் நிலத்தில் அப்படியே கூடையை நடலாம்.

நாற்றுக் குச்சிகள் தயாரிக்க, 1–2 வருடம் வளர்ந்த நாற்றுக்களையே உபயோகிக்க வேண்டும். நடும் இடத்தில் குழிகளில் மண்ணைக் குவித்து, அதில் நடவேண்டும். இடைவெளி ஆரம்பத்தில் 3 x 3 மீட்டர் அளவில் நட்டு, பின்பு வளர்ச்சியைப் பொருத்து, குன்றிய வளர்ச்சியுடையவற்றை அகற்றிடலாம். ஆரம்பத்தில் வளர்ச்சி நிதானமாக இருக்கும். அதுசமயம் நல்ல சூரிய ஒளி கிடைக்கச் செய்ய வேண்டும். அருகிலுள்ள பெரிய மரங்களின் கிளைகளை வெட்டிட வேண்டும். மழைநீர் நன்கு உட்புக. செடிகளைச் சுற்றிலும் கொத்திக் கொடுக்க வேண்டும். கோடையில் இலையுதிர்த்திடும்: மழைக் காலத்தில் நன்கு துளிர்த்திடும்: வேகமாகவும் வளரும்.

நட்ட 18வது வருடத்திலிருந்து வைரப்பகுதி உருவாகத்துவங்கிடும்: 25 30 வருடங்களில் அதிக அளவில் உருவாகும். மறு தாம்பு விட்ட மரங்களில் 15வது ஆண்டிலேயே வைரப்பகுதி உருவாகத் துவங்கும்.

கிராமங்களில் பழத் தோட்டங்களில் காற்றுத் தடுப்பு மரமாகப் பயிரிடுவதற்கு ஏற்றது. எலுமிச்சைத் தோட்டங்களில் செஞ்சந்தன மரங்களை காற்றுத் தடுப்பு அரணாக அமைப்பது சில இடங்களில் புழக்கத்தில் உள்ளது. மற்றபடி ஆழ்மான மண்கண்டம் உடைய மானாவாரிச் செவ்வல், செம்புறை நிலங்கள் ஆகியவற்றிலும் வளர்க்கலாம், நிலத்தின் அருகே காட்டோடைகள் இருந்தால், அதனை ஒட்டி ஒரு வரிசை நடலாம். பஞ்சாயத்து நிறுவனங்கள், சாலை, வாரி, கால்வாய்க்கரை, கண்மாய்க்கரை ஆகிய இடங்களில் வளர்த்தால் 40 ஆண்டுகள் சென்று, கணிசமாக வருவாய் பெறலாம்.

நுகரங்களில் கூட, பெரிய கட்டிட வளாகங்கள், ஆலைப் பகுதிகள், சாலையோரங்கள் எனப் பல இடங்களிலும் நட்டு வளர்க்கலாம்.

## Red Sandalwood Trees in TIST Program

Several small groups in TIST Program have planted Red Sandalwood Trees. The members say that this tree species is easy to maintain and moreover, after thirty years, this tree species get very good yield. Groups who have joined from beginning of 2008 have planted this Red Sandalwood with full interest. Several groups like, Pillaiyarppan, Ettiyamman, Abdulkalam, Ranugambal of Arani Center have planted this tree species.

## TIST யின் செஞ்சந்தன மரம்

TISTயின் பல சிறுகுழு உறுப்பினர்கள் செஞ்சந்தன மரத்தை தங்களது தோப்பில் நடவு செய்துள்ளனர். இம்மரம் பராமரிப்பதற்க்கு எளிதாகவும் மற்றும் முப்பது ஆண்டுகளுக்கு பிறகு விற்பனையில் நல்ல வருமானத்தையும் பெற்றுத்தரும் என்று மகிழ்ச்சியாக இருக்கின்றனர் இம்மரங்களை நடவு செய்த உறுப்பினர்கள், குறிப்பாக 2008 லிருந்து சேரும் குழுக்கள், இந்த செஞ்சந்தன மரத்தை ஆர்வமுடன் நடவு செய்கின்றனர். ஆரணி மையத்தில் பல சிறுகுழுக்கள், உதாரணமாக பிள்ளையாரப்பன், எட்டையம்மன், அப்துல்காலம், ரேனுகாபால் போன்ற சிறுகுழுக்கள் இம்மரத்தை நடவு செய்து உள்ளார்கள்.

## டிஐஎஸ்டி நிகழ்வில் பங்குகொள்ள அங்கத்தினர்கள் பூர்த்தி செய்ய வேண்டிய தகுதிகள்

1. ஒவ்வொரு சிறு குழுவிலும் குறைந்தது மூன்று வெவ்வேறு குடும்பங்களை சார்ந்த 6 முதல் 12 உறுப்பினர்கள் இருக்க வேண்டும்.

2. ஒவ்வொரு சிறு குழுவும் குறைந்தது 1,000 உயிர் மரங்களை, டிஐஎஸ்டியில் சேர்ந்த ஒரு வருடத்திற்குள் வளர்க்க வேண்டும்.

3. டிஐஎஸ்டியில் சேர்ந்து ஐந்து வருடங்களுக்குள் குறைந்தது 5,000 உயிர் மரங்களை கொண்டிருக்க வேண்டும்.

4. உங்கள் சிறு குழு ஒவ்வொரு வருடமும் 20, வருடங்களுக்கு அழிந்த அல்ல விழுந்தபோன மரங்களின் இடத்தில் புதிய மரங்களை வளர்க்க வேண்டும.,

5. எல்லா சிறு குழுவும் கிரீன்ஹவுஸ் உடன்படிக்கையில் கையெழுத்திட வேண்டும்.

6. டிஐஎஸ்டி ஒரு வருடத்திற்கு ஒரு உயிர் மரத்திற்கு ரூ.1.50 (US $0.03) கொடுக்கும் (கிரீன் ஹவுஸ் உடன்படிக்கையை படித்து மேலும் விவரங்களை தெரிந்து கொள்ளுங்கள்).

7. புதர்கள் அல்லது 4மீ உயரத்திற்கு குறைவாக வளரும் இனவகை மரங்களை டிஐஎஸ்டி மரமாக கணக்கில் எடுத்து கொள்ளாது.

8. 2மீஇடைவெளிக்கும் குறைவாக பயிரிடப்படும் மரங்கள் கணக்கில் எடுக்க இயலாது.

9. 10 வருடங்கள் அதற்கு மேல் வளர்ந்த மரங்களையே டிஐஎஸ்டி அறுவடை செய்ய அனுமதியளிக்கும். எனினும் ஒரு வருடத்திற்கு 5 சதவிகிதத்திற்கு மேலாக அறுவடை செய்ய கூடாது.

10. ஒவ்வொரு சிறு குழுவும் 33 சதவிகிதத்திற்கும் குறைவாகவே குறுகியகால மரங்கள் இருக்கவேண்டும். (உ.த. தைலமரம்) தற்பொழுதிய குழுக்கள் 33 சதவிகிதத்திற்கு மேல் குறுகியகால சுழற்சி முறை மரங்களை வளர்ப்பின் அவர்கள் 5 வருடம் (2012) வரை கூடுதலான மரங்களை வளர்க்க காலம் கொடுக்கப்படும். அல்லது இந்த தகுதியடையும் வரை மரங்களை அறுவடை செய்ய இயலாது.

11. டிஐஎஸ்டி சிறு குழுக்கள் ஆண்டிற்கு ஒரு முறை கட்டாயமாக ஆய்வாளர்களை அழைத்து தங்கள் தோப்பினை ஆய்வு செய்து கொள்ள வேண்டும். இவர்கள் மற்ற சிறு குழுவினரோடு சேர்ந்து ஆய்வின் பொழுது, ஆய்வாளர்களுக்கு உணவும், தங்கும் இடமும் ஏற்பாடு செய்ய வேண்டும்.

12. சிறு குழு அங்கத்தினர் ஒன்றாக கூடி தங்களின் பயிற்சி முறைகளையும். ஆலோசனைகளையும் பகிர்ந்து கொள்ள வேண்டும். ஒவ்வொரு வாரமும் சந்திக்க இயலாவிட்டால் மாதம் ஒரு முறையாவது சந்திக்க வேண்டும்.

13. சிறு குழு அங்கத்தினர் தாங்கள் மரங்களை வளர்க்கும் நிலத்தின் உரிமை சான்றினை அளிக்க வேண்டும்.

14. குழுவின் அங்கத்தினர்கள் டிஐஎஸ்டி பயிற்சியில் பங்கு கொண்டு மற்ற குழுக்களுடன் தங்களின் சிறப்பு பயிற்சி முறைகளை பகிர்ந்து கொள்ளவேண்டும்.

15. உங்கள் சிறு குழு உள்ள பகுதியில் மற்ற சிறு குழுக்களும் நடந்து செல்லும் தூரத்தில் அமைந்திருக்க வேண்டும். ஒரு வருடத்திற்குள் 100,000 மரங்களும் 5 வருடங்களுக்குள் 300,000 மரங்கள் வளர்க்கும் தகுதியும் கொண்டிருக்க வேண்டும்.